# இறைமக்களின் திருவழிபாடு

தொலைக் கல்வி நிறுவகம்
தேசியக் கல்வி நிறுவகம்

| | |
|---|---|
| கிறிஸ்தவம் | 1218 |
| இறைமக்களின் திருவழிபாடு 121806 | |

உள்ளடக்கம் பக்கம்


0.0 அறிமுகம் . . . . . . 3

1.0 குறிக்கோள்கள் 3

2.0 முற்சோதனை . . . . . . 4

பகுதி I

3.0 திருவழிபாடு என்றால் என்ன? . . . . . . 5

பகுதி II

4.0 திருவழிபாட்டின் நடுநாயகமான இடம் திருப்பலி பூசை . . . . . . 10

பகுதி III

5.0 வழிபாட்டின் மறுமலர்ச்சி – 2 ம் வத்திக்கான் சங்கம் . . . . . . 18

6.0 பொழிப்பு . . . . . . 25

7.0 பிற் சோதனை . . . . . . 25

8.0 ஒப்படை . . . . . . 28

9.0 சொற்பட்டியல் . . . . . . 28

10.0 மேலதிக வாசிப்பு . . . . . . 29

11.0 விடைகள் . . . . . . 30



(C) 1989 தேசியக் கல்வி நிறுவகம்



பதிப்பு 1 . 1

# 0.0 அறிமுகம்

இயேசு நற்செய்தியைப் போதித்தும், தன் வாழ்வைப் பலியாக ஒப்புக்கொடுத்தும், தாம் மேற்கொண்ட இறைபணியை நிறைவேற்றினுர் என்பதை முன் படித்துள்ளீர்கள். அதே பணியைத் தொடர்ந்து செயலாற்றத் திருச்சபையைத் ஸ்தாபித்தார். திருச்சபையானது இன்றுவரை இப்பணியை விசேடமாகத் திருவழிபாட்டின் மூலம் தொடர்ந்தாற்றி வருகின்றது. இப்போது உங்களது கவனத்தை இக் கொள்கைத் திரட்டுக்கு அழைக்கின்ருேம். அதாவது, திருவழிபாடு என்ருல் என்ன? இதன் முக்கிய பகுதிகள் எவை? என்பதாகும்.

கிறிஸ்தவன் ஒவ்வொருவனும், இத்திருவழிபாட்டை ஓரளவு விரும்புகிருன். இறைவனைப் பலவித வழிபாட்டு முறைகளினுல், வாழ்த்தி, வணங்கி, நன்றி செலுத்துகிருன். அவன் இறைவனின் பாதுகாப்பைத் தேடுகிருன். அருட்சாதனங்களைப் பெறுவதினுலும், திவ்விய பலிபூசையிற் பங்கு கொள்வதினுலும் புனிதத்துவத்தை அடைகிருன். இவற்றைக் கைக்கொள்வதினுல் விசுவாசத்தை அறிக்கையிடுகிருன். கத்தோலிக்கர் அல்லாதவர்கள் இதனைத் தெய்வீக வழிபாடு என அழைக்கின்றனர்.

2 ஆம் வத்திக்கான் சங்கத்தின், பொதுசங்கக்குழு, திருவழிபாட்டின் படிப்பினைகளை நன்ருகப் புதுப்பித்துள்ளது. இந்த அளப்பதற்கான அலகின் பின்னணி இறைமக்களின் திருவழிபாட்டின் சங்க ஏடாகும்.

# 1.0 குறிக்கோள்கள்

இந்த மொடியூலைக் கற்பதனுல் பின்வரும் குறிக்கோள்களை எய்தக் கூடியதாக இருத்தல் வேண்டும்.

- ✶ திருவழிபாடு என்ருல் என்ன என்பதை ஆராய்ந்தறிதல்.
- ✶ திருவழிபாட்டின் மூலம், திருச்சபை எவ்வாறு புனிதமடைகிறது, வளருகின்றது என்பதை அறிதல்.
- ✶ திருவழிப்பாட்டுக்குப் பக்தி உணர்வை வளர்த்தல்.
- ✶ திருப்பலிபூசையில் செயல்முறையில் பங்கு பெறும் ஆற்றல் வளர்த்தல்.
- ✶ அதிக பயன்தரும் வழியில், திருவழிபாட்டிற் பங்கு பெற முக்கியத்துவம் கொடுத்தல்,
- ✶ இறை மக்கள் என்ற முறையில், கடமைகளைத் திருப்திகரமாகச் செய்யும் ஆற்றலை வளர்த்தல்.

இத்துடன் முற்சோதனையைத் தருவதன் நோக்கம் உங்கள் அறிவைப் பரிசோதிப்பதற்காகவே.

## 2.0 முற்சோதனை

பின்வரும் வாக்கியங்கள் சரியாயின் √ எனவும் பிழையாயின் × எனவும் குறித்திடுக,

1 திருவழிபாட்டின் மூலம் இறைமக்கள் இறைவனுக்கு அதிமேலான வணக்கத்தை செலுத்துகின்றனர். ☐

2 செபவாழ்க்கை, மீட்புக்கு அத்தியாவசியமில்லை. ☐

3 திருவழிபாடு புனிதத் தன்மையை அடைய உதவுகின்றது. ☐

4 திருவழிபாட்டில் முழுமையாகச் செயல் முறையில் பங்கு கொள்வது விசுவாசிகளின் கடமை. ☐

5 திருவழிபாடு இறைமக்களின் விசுவாசத்தை அறிக்கையிடுகின்றது. ☐

6 திருவழிபாட்டுச் சடங்குகளிற் பங்குபெறும் போது இறைவார்த்தைக்குச் செவிசாய்ப்பது முக்கியம். ☐

7 திருவழிபாட்டின் மூலம் எம் விசுவாசத்தை அறிக்கையிட வேண்டும். ☐

8 திருவழிபாட்டின் ஊற்று பரிசுத்த வேதாகமம். ☐

9 திருவழிபாட்டின் ஒரு பகுதி எங்கள் செபமாகும். ☐

10 செபமாலை ஓதுதல் திருவழிபாட்டின் ஒரு முக்கிய பகுதியாகும், ☐

உங்கள் விடைகளை மொடியூலின் இறுதியில் உள்ள விடைகளுடன் ஒப்பிடுக.

முற்சோதனை உங்கள் அறிவைப் பரிசோதித்து உங்களுக்கு உதவியளித்துள்ளது. எனவே இப்போது உங்கள் கவனத்தைத் திருவழிபாட்டிற் செலுத்துகின்றோம்.

## 3.0 திருவழிபாடு என்றால் என்ன?

இந்த வினாவுக்கு விடையளிப்பதற்கு முன் இறை வணக்கத்தின் சரித்திரத்தை, சமூக, மனித இயல்பினை அடிப்படையாகக் கொண்டு அவதானிப்போம். ஆதி மனிதன் புரட்சிகரமாக இயற்கையை வணங்கினன். ஏனெனில் இவனுக்கு விஞ்ஞான அறிவு குறைவாகக் காணப்பட்டது. சரித்திர வரலாறு பின்வருவனவற்றை எடுத்துக் காட்டுகின்றது.



மனிதன் பலவித சமயங்களையும், தத்துவங்களையும் அனுசரிப்பதற்குப் பல வழிபாட்டு முறைகளைத் தோற்றுவித்தான். இதனல் நமது சிந்தனை இவை பற்றி, ஒருவிதத்தில் திருப்தியின்மையை அளிக்கின்றது. ஏனெனில் கற்கால மனிதன், தனது வாழ்வில் வேட்டையாடுவதன் மூலம் மான், மரை முதலியவற்றின் மாமிசத்தைத் தெய்வங்களுக்குக் காணிக்கையாக ஒப்புக் கொடுத்துப் பாதுகாப்பைப் பெற்றுக் கொண்டான்.

### ஆதிகால தெய்வீக வழிபாடு

ஆதிகால மனிதன், இறைவனைத் தனது படைப்பாளரும் பாதுகாப்பாளருமாக ஏற்றுக்கொண்டான் என்பதற்கு வேதாகமம் சாட்சி பகருகின்றது. இதனல் அவன் நன்றி, இறைவணக்கம், விண்ணப்பம், இவ்வடையாளங்களிற் கூடுதலான முயற்சி எடுத்தான், இத்துடன் இறைவனுக்குப் பலிகள் ஒப்புக்கொடுத்தான். ஆபேல், நோவா, ஆபிரகாம் அவர்கள் ஒப்புக்கொடுத்த பலிகளை இவை ஒத்திருக்கின்றன. இதற்கு மேலதிக அத்தாட்சிகளைப் பூர்வீக சமயங்களின் சடங்குகளிலும், வழிபாட்டு முறைகளிலும் காணக்கூடியதாக இருக்கிறது. எனவே மிருக தாவரப் பலிகளின் வரலாறு பூர்வீக காலங்களில் இருந்து தொடர்ந்து வந்துள்ளது என்பதில் ஆச்சரியமில்லை. (கி. மு. 5000) மத்திய கிழக்கு நாடுகளில் உள்ள மக்கள் தங்கள் தெய்வங்களுக்கு, மிருக, தாவர, மனித பலிகள் ஒப்புக்கொடுத்ததைக் காண்கிறோம். இவ்வித பலிகள் குறிக்கப்பட்ட சமயத்தவரின் சமய மனப்பாங்கைக் கொண்டுள்ளன. சமய அடிப்படையில் இவற்றை ஆராயும் போது ஆதி மனிதன் இவ்வித பலிகளையும். காணிக்கைகளையும், தெய்வங்களுக்கு ஒப்புக்கொடுத்து பயத்தின் நிமித்தம், வழிபட்டான் என்பது புலனுகின்றது.

### இறை திருவழிபாடு

இன்று திருச்சபையானது இறைவழிப்பாட்டில், விசுவாசிகளுக்கு மனப்பயத்தை நீக்கி, எல்லாவற்றிற்கும்



மேலான வணக்கத்தை இறைவனுக்குச் செலுத்தவும் தங்களது தூய அன்பையும், விசுவாசத்தையும், இறைவன் மேல் வைப்பதற்கான வழிவகைகளையும் வகுத்துள்ளது. திருச்சபையில், எப்பொழுதும் கிறிஸ்து தங்கியிருக்கிறார். உண்மையாகவே இறைவனுக்கு மாட்சி நல்குவதும், மக்களைப் புனிதப்படுத்துவதுமான இம்மாபெரும் பணியில் தம் ஆண்டவரைக் கூவி அழைத்து, அவர் வழியாக என்றும் வாழும் தந்தைக்கு வழிபாடு நடத்தும் தமது அன்புமிக்க மணமகளாம் திருச்சபையைக் கிறிஸ்து என்றுமே தம்முடன் இணைத்துக் கொள்கிறார். ஆகவே திருவழிபாடானது இயேசுக்கிறிஸ்துவின் குருத்துவப்பணி செயல் என்று கருதுவது பொருத்தமே இச்செயலிலே புலன்களுக்கு எட்டக்கூடிய அடையாளங்களால், மனிதரின் புனிதத்தன்மை குறிக்கப்பட்டு, அந்தந்த அடையாளங்களின் இயல்புக்கு ஏற்ப அது விளைவிக்கப் பெறுகின்றது. இயேசுக்கிறிஸ்துவின் மறையுடலால் தலையாலும், அதன் உறுப்புக்களாலும், வெளிப்படையான முழுவழிபாடு, இச்செயலில் நடத்தப்படுகின்றது.

திருவழிபாடு ............2ம் வத்திக்கான சங்கம். அதி. *1 எண் 7 / 2 – 3 பந்தி)*

மேற்கூறிய ஏட்டின்படி, திருவழிபாட்டின் தீர்மானத் தொகுப்பு பின்வரும் முறையில் ஆராயப்பட்டுள்ளது.

— இது மறையுடலின் செயற்பாடு

— பிரதான குரு கிறிஸ்து திருச்சபையுடன் இணைந்து மேலான வணக்கத்தைப் பிதாவுக்குச் செலுத்துகின்றார்.

— பிதாவுக்கு, முழுமையான வாழ்த்தைஅளிப்பதையே திருவழிபாடு நோக்கமாகக் கொண்டுள்ளது.

— மனித குலத்தைப் புனிதப்படுத்துவதற்குத் திருவழிபாடு அமைந்துள்ளது.

திருவழிபாடானது இறைமக்களின் பொதுப்பணியாகும் என இது தெளிவாகக் காட்டுகின்றது. இத் திருவழிபாட்டின் மூலம், விசுவாசிகள் இறைவனுக்கு மாட்சி நல்கி, மென்மேலும் புனிதப்படுத்தப்பட்டு தலையாகிய கிறிஸ்துவுடன் ஒன்றிணைந்து இறைவனை வழிபடுகின்றனர். இவ்விதம் திருச்சபையின் செயல் முழுதுமே நாடி நிற்கும்சிகரமாக திருவழிபாடு அமைந்துள்ளது. அத்துடன் திருச்சபையின் ஆற்றல் அனைத்திற்கும் ஓர் ஊற்றுகவும் உள்ளது. ஏனெனில் விசுவாசத்தாலும், ஞானஸ்நானத்தாலும் இறைவனின் பிள்ளைகளாக்கப்பட்டுள்ள யாவரும் ஒன்று கூடி வந்து சபை நடுவில் இறைவனைப் புகழ்வதையும் திருப்பலியில் பங்கெடுப்பதையும், ஆண்டவரின் திருப்பந்தியில் அமருவதையும், தம் நோக்கமாகக் கொண்டுள்ளது. அத்துடன் நற்செய்திப் பணி, மறைக்கல்வி,

போதனைகள், அன்புச் செயல்கள் இவைகள் மூலம் ஒன்று சேர்த்து இறைவனுக்கு உகந்த வண்ணத்தைச் செலுத்தலாகும். இதன் வழியாக அருள் வாழ்வானது ஓர் ஊற்றிலிருந்து முதன்மையானதும், இன்றியமையாததுமான செயலாக திருவழிபாடு அமைகின்றது. (திருவழிபாடு-2ம் வத்திக்கான் சங்கம் அதி 1 எண் 10)

இப்போது திருவழிபாட்டின் முக்கிய பாகங்கள் எவை என்பதைப் பார்ப்போம்.

திருவழிபாடு :—

— திவ்விய பலிப்பூசை
— திருவருட்சாதனங்கள்
— புகழ்மாலை

இவை திருச்சபையினால் அங்கீகரிக்கப்பட்ட விதிகளின் படி நடாத்தப்படுகின்றன.

உபதிருவாழிபாடுகள்

— தேவ நற்கருணைச் சந்திப்பு
— நோவினைகள்
— வேதாகமே வழிபாட்டுமுறை
— தியானம், ஞானவொடுக்கம்
— செபமாலை ஓதல்
— சிலுவைப் பாதை
— ஒரு சந்தி
— உபவாசம்
— தபக்கிரிகைகள்
— புனிதர்களுக்கு ஆராதனை
— திருப்பாட்டுகளைப் பாடுதல் (பசாம்)
— தனிச்செபம்

மேற்கூறிய திருவழிபாட்டிலிருந்து முழுப்பலனையும், அடைய வேண்டுமாயின் விசுவாசிகள் அனைவரும் நல்ல மனநிலையுடன் சொற்களோடு, உள்ளமும் இணைந்து, நிறைவாக செயல் முறையில் பயனுள்ள விதத்தில் பங்கு கொள்ள வேண்டுமென்று, திருச்சபை படிப்பிக்கின்றது. 2ம் வத்திக்கான் சங்கம், எமக்கு எடுத்துக் காட்டுவது என்னவென்றால் திருவழிபாட்டுக்கு முதல் இடமும், செபத்தின் அவசியத்தைப் பற்றியதுமாகும். சமூகத்தோடு சேர்ந்து, செபிக்க அழைக்கப்பட்டுள்ள கிறிஸ்தவன், தனது அறைக்குள் சென்று, மறைவிலே தந்தையிடம் செபிக்க வேண்டும். (திருவழிபாடு 1:12)

கிறிஸ்தவ மக்களின் பக்தி முயற்சிகள் பற்றித் திருச்சபையின் அறிவுரை:—

— இப் பக்தி முயற்சிகள் திருச்சபையின் சட்டங்களுக்கு இசைந்ததாக இருத்தல் வேண்டும்.

— திருச்சபையினால் விதிக்கப்பட்ட உபதிருவழிபாடுகளுக்குத் தனி மதிப்பளிக்கிறது.

— இவ்வித தூய பக்தி முயற்சிகள், திருச்சபை, திருவழிபாட்டு ஆண்டுடன் இணைந்ததாக இருத்தல்.

(2ம் வத். சங் தி.வழிபாடு அதி 1 எண் 13)

திருவழிபாடு, உபதிருவழிபாடு மூலம், இன்றைய நவீன உலகில் உள்ள திருச்சபையின் இறைமக்களும் சமுதாய மும் புனிதத்தத்துவத்தைப் பெற்று, இறை அரசுக்குச் சான்று பகிருகின்றனர். நற்செய்திக்கு மற்றவர்களைக் கவர்ந்து, இறைவனின் சித்தத்தை நிறைவேற்றித் தனியாகவும், சமுதாயமாகவும் இறைவனை வாழ்த்து கின்றனர். திருவழிபாடு எமக்கு உணர்த்துவது என்ன வென்றால், உத்தான இயேசுவில் ஊறச் செய்வது, மறை உடலின் அதி உன்னதமான செயலாகும்.

இப்போது நீங்கள் படித்தவற்றைச் சுருக்கமாக ஆராய் வோம்.

— ஆதிமனிதன் இயற்கையைத் தெய்வமாக வணங்கித் தற்பாதுகாப்பைப் பெற்றான்

— கிறிஸ்து திருச்சபையில் இருந்து, திருவழிபாட்டின் மூலம் இறைவனை வாழ்த்தியும், மக்களைப் புனிதப் படுத்தியும் வருகிறார். இது இறைமக்களின் சமு தாயப் பணியாகும்.

— திவ்விய பலிபூசை, திருவட்சாதனங்கள், புகழ் மாலை யாவும், திருவழிபாட்டில் அடங்குகின்றன. திருவழிபாட்டுக்கான பயிற்சியை இறைமக்கள் உபதிருவழிபாடு அல்லது பக்தி முயற்சிகள் மூலம் பெறுகின்றனர். இந்த ஊற்றிலிருந்து விசுவாசிகள் கிறிஸ்தவ உணர்வைப் பெறுகின்றனர்.

— திருவழிபாட்டின் மூலம் திருச்சபை அருளையும் வல் லமையையும் பெறுகின்றது. கிறிஸ்தவர்கள் திரு வழிபாட்டின் மூலம், கிறிஸ்துவைப் பெற்று கிறிஸ்து வின் பாஸ்காமறை பொருளிற் பங்கு கொள்ளுகின் றனர்.

— இறைமக்களின் கடமை யாதெனில், முழு அறி வுடனும் நிறைவாகவும், செயல்முறையில், திருவழி பாட்டில் பங்கு கொள்ளல்.

— திருச்சபையினால் அங்கீகரிக்கப்பட்ட ஆராதனை களும் பொதுப் பக்தி முயற்சிகளும் உயர்த்த நிலை யாகக் கருதப்படுகின்றன.

— **திருவழிபாட்டிற் பங்குகொண்டு, செபத்தில் நிலைத் திருப்பது கிறிஸ்தவனின் கடமையாகும்.**

— **கிறிஸ்துவின் மறை உடலின் வெளிப்படையான அதி உன்னத செயலானது திருவழிபாடாகும்.**

பயிற்சி I (அ) அடைப்புக்குறிக்குள் உள்ளவற்றிலிருந்து, சரியான வற்றைத் தெரிந்தெடுத்துப் பின்வரும் கூற்றை முடிவு செய்க.

i ஆதிமனிதன் பௌதிக விஞ்ஞான அறிவில் முன்னேற்றமடையாமல் இருந்த படியால் இயற்கையைத் தெய்வமாக வணங்கினன். ஏனெனில் (ஞானம், அச்சம், பக்தி, முயற்சி பயம்)

ii திருவழிபாடானது (நான்கு, இரண்டு, மூன்று, பலபகுதிகளை) உள்ளடக்கி உள்ளது

iii பெரிய குரு கிறிஸ்து, மேலான வணக்கத்தை (பிதா, பரிசுத்த ஆவி, பரிசுத்த திரித்துவத் திற்கு) திருவழிபாட்டின் மூலம் அளித்தார்.

iv (பக்தி முயற்சிகள், அருட்சாதனங்கள், புகழ் மாலை, திருவழிபாடு) இவை மூலமாகத் திருச் சபை அருளையும், அதிகாரத்தையும் இறை பணிக்குப் பெறுகின்றது.

v உபதிருவழிபாட்டின் மூலம், இறைமக்கள் பெறும் பயிற்சி (திரு அருட்சாதனங்களைப் பெறல், அப்போஸ்தலிக்க சேவை, திருவழி பாடு, மற்றவர்களை புனிதப்படுத்துவதற்கு) பெறுகின்றனர்.

சரியான வாக்கியத்தின் கீழ் கோடிக.

(ஆ)

1 நீதிமான்கள் பாக்கியம் பெற்றவர்கள். இறைவனை வணங்குபவர்கள். மற்றவர்களுக்கு ஆசியுரையும் தமக்கு ஆசீர்வாதத்தையும் பெறுபவர். ''நீதிமான் கள்'' என்பவர்கள் - ஒன்றும் தேவைப்படாதவர் கள்.

i தண்ணீரினல் திருமுழுக்கு பெற்றவர்கள்.
ii இறைமக்கள்
iii இரத்த திருமுழுக்குப் பெற்றவர்கள்.
iv ஆதிகால இஸ்ராயேலர்

2 திருவழிபாட்டிற் செயலாற்றுபவர்கள்

i குருக்கள், துறவிகள்
ii கிறிஸ்துவும் இறைமக்களும்
iii குருக்களும், இறைமக்களும்
iv பரிசுத்த பாப்பரசரும், இறைமக்களும்

3 கிறிஸ்து ........................ திருவழிபாட்டில் செயலாற்றுவதன் நோக்கம், பிதாவுக்கு மேலான வணக்கத்தையும், மக்களை புனிதப்படுத்துவதற்கு மேயாம்.

i பணிவிடைக்காரராஞை
ii குருவாக
iii ஆட்சியாளஞக
iv இறைவாக்கினராக

4 உன்னத நிலை அல்லது, சிகர நிலையில் திருச்சபை யின் பலவித பணிகள் வழிந்தோடுவது

i அருட்சாதனங்கள்
ii புகழ்மாலை
iii திருவழிபாடு
iv திவ்வியபலி பூசை, மூலமாகும்.

உங்கள் விடைகளை மொடியூலின் இறுதியில் உள்ள விடைகளுடன் ஒப்பிடுக.

நாங்கள் இப்போது திருவழிபாட்டின் முக்கியத்து வத்தை அறிந்துள்ளோம். எனவே திருவழிபாட்டின் மையமான திவ்விய பூசைப்பலியில் 'எங்கள் கவனத்தை செலுத்துவோம்.

பகுதி:11

## 4.0 திருவழிபாட்டின் மையம் திவ்வியபலிப் பூசை

''இறைவனின் அருளைப் பெற நமது உள்ளத்தின் அக மகிழ்வுடன் இறைவனை ஆராதித்து அவரை வணங்க நாம் முழு மரியாதையுடனும், பயபக்தியுடனும் அவர் முன் செல்வோம்.''

கி. மு. 400ல், பழைய ஏற்பாட்டில் இஸ்ராயேல் மக்கள் ஒரு தனி நாட்டினர் அல்லது ஒரு தனி சாகியத் தவராக மோயீசன் தலைமையில் உண்மைக் கடவுளை வழிபடத் தொடங்கினுர்கள். இஸ்ராயேல் பரம்பரை யில் (ஆபிரகாம் குடும்பத்தில்) கிறிஸ்து மெசாயா உண்மைத் தெய்வம் தோன்றினுர், உலகிற்கு இவரே இறைவனின் உண்மையான குணதிசயத்தை காண்பிக் கின்ருர். இறைவன் அன்புள்ள தந்தை என்பதையும் தனது ஒரே பேருன குமாரனை உலகின் மீட்புக்காக அனுப்பினுர் என்பதையும், இயேசு வெளிப்படுத்தினுர்.

இவ் வெளிப்படுத்தலைத் திடப்படுத்த, இயேசு கல்வாரியில் தன்னைப் பலியாக்கி, இறைவனுடன் மனிதனை ஒப்புரவாக்கிச் சாட்சி பகன்ருர். இயேசுக் கிறிஸ்து

வின் வாழ்க்கையை உற்றுநோக்கும்போது இறைவன் எம்மேல் வைத்த அன்பு நன்கு புலனாகின்றது. கல்வாரியின் புதிய உடன்படிக்கையானது, அந்த அன்பின் உயிருள்ள அடையாளமாகிறது. கல்வாரியில் நடந்த பலியைத்தொடர்ந்தாற்ற கிறிஸ்து தேவ நற்கருணையையும், பலிபூசையையும் ஏற்படுத்தினர். இன்று திவ்விய பலிபூசையானது, திருவழிபாட்டின் மையமாக விளங்குகிறது. திருவிருந்தையும், திருப்பலியையும் நாம் பிரிக்க முடியாது. திருப்பலியை மகிமைப்படுத்துவது திருவிருந்து. அந்தத் திருவிருந்தை மகிமைப்படுத்துவது திருப்பலி கல்வாரிப் பலியின் உண்மையான விளக்கம் திருவிருந்தில் வெளியாகிறது. திரித்துவத்தின் இரண்டாம் ஆள், மனித அவதாரமெடுத்து, பாடுபட்டுச் சிலுவையில் மரித்தார். நம் எல்லோரையும், பாவமென்றும், சாவிலிருந்து மீட்டார். இதை நன்கு விளங்க வைப்பதற்கு யேசு கூறியதாவது, ''என்னை என் அன்புத் தந்தை நேசிக்கிறார், ஏனெனில் நான் என் வாழ்வில் முழுமையாக அர்ப்பணிக்கிறேன். அவரிடமிருந்து முழுமையாகப் பெறுவேன். எனது பூரண சுதந்திரத்தில் என்னை முழுமையாக அர்ப்பணித்தேன். எனக்குக் கொடுக்கவோ எடுக்கவோ முழுச் சுதந்திரம் உண்டு என என் தந்தை எனக்குக் கட்டளையிட்டுள்ளார்.'' (அரு. 10/17-18) தந்தையின் சித்தத்தின் படி இயேசு தம் வாழ்வின் ஒவ்வொரு கட்டத்தையும். முழுமையாக அர்ப்பணித்து சாவிலிருந்து உயிர்த்தார், திருச்சபையின் மறையுடலானர். அவரது விலாவிலிருந்து சிந்திய இரத்தத்திலிருந்து திருச்சபை ஸ்தாபிக்கப்பட்டது. ஆகவே திருச்சபையானது இயேசுக் கிறிஸ்துவின் மணவாட்டியாகும்.

இயேசு தாம் பாடுபடுவதற்கு முன் அப்பத்தையும் இரசத்தையும் தம் கரங்களிலேந்தி, அதைத் தமது உடலாகவும் இரத்தமாகவும் மாற்றியது நித்திய உடன்படிக்கையின் சின்னமாக விளங்குகின்றது. கடைசி இரா உணவின் போது என்ன நடந்தது என்பதை ஆராய்வோம்.

நற்செய்தியில் இயேசுக்கிறிஸ்து தமது அப்போஸ்தலர்களுக்குக் கல்வாரியில் நடக்கப்போவதைப் பற்றி துலாம்பரமாய் எடுத்துக் காட்டினர். நேரம் வந்ததும், இயேசு பாஸ்கா உணவை அருந்துவதற்காக மேசையில் அமர்ந்தார். பழைய ஏற்பாட்டின்படி புதிய பாஸ்காவை அவர் நிறைவேற்றினர். மேலும் அவர் அப்பத்தை எடுத்து ஆசீர்வதித்து, பிட்டு அவர்களுக்கு அளித்து, ''இது உங்களுக்காக கையளிக்கப்படும் என் சரீரம், இதை என் நினைவாகச் செய்யுங்கள்'' என்றார். அடுத்தநாள் அவர் படப்போகும் பாடுகளையும், மரணத்தையும் இங்கு நினைவுபடுத்தினர். இக் கல்வாரிப்பலியானது எதிர்காலத்தில் திருவருட்சாதனங்களுடன் ஒன்றிணைந்து நடைபெறவேண்டும் என்பதாகும்

அவ்வாறே கிண்ணத்தை எடுத்து, ''இக் கிண்ணம் உங்களுக்காகச் சிந்தப்படும் என் இரத்தம். இந்த இரத்தம், நாளைக்கு உங்களுக்காகச் சித்தப்படும் இந்தப் புதிய உடன்படிக்கையானது இறைவனையும், மனிதனையும் ஒப்பரவாக்குகின்றது. ஆகவேதான் பெரிய வியாழன் நடந்த கல்வாரிப்பயில் அப்போஸ்தலர் பங்கு கொண்டு நற்கருணை பெற்றனர். பழைய ஏற்பாட்டில் நடைபெற்ற பாஸ்காப்பலியும், புதிய ஏற்பாட்டின் கல்வாரிப்பலியினதும் மறுபதிப்புத்தான் சிலுவைப் பலியாகும். எனவே திருச்சபையானது, இயேசுவின் வேண்டுகோளை இன்று திருப்பலியில் நிறைவேற்றி வருகிறது.

இப்போது ஆதிக்கிறீஸ்தவர்கள் எவ்வாறு பூசைப்பலி நிறைவேற்றினார்கள் என்பதைப் பார்ப்போம்.

## ஆதி கிறீஸ்தவர்களின் திவ்வியபலிப்பூசை



இது அப்போஸ்தலர் பணியில் விபரிக்கப்பட்டுள்ளது (2/46-47) நாள்தோறும் தவறுமல் ஒரே மனதாய்க் கோவிலில் கூடுவர். வீடுகளில் அப்பத்தைப் பிட்டு, மனமகிழ்வோடும், கபடமற்ற உள்ளத்தோடும் பகிர்ந்து கொள்வர். இங்ஙனம் இறைவனைப் புகழ்ந்து வந்தனர்: கடைசி இராப்போசனத்தில் நடைபெற்றது போல், இப்பொழுது உணவானது, கிறிஸ்துவின் மரணத்தை அறிக்கையிடுகின்றது அக்காலத்தில் அப்பம் பிட்டுக் கொள்வது வழமையாயிற்று. எனவே, நற்செய்தியிலும் இயேசு அவ்வாறு செய்தார் எனக் காட்டப்பட்டுள்ளது. அவ்விதமே ஆதி கிறீஸ்தவர்கள் அப்பத்தையும், இரசத்தையும் ஒரே மனதாய்த் தமக்குள்ளே பகிர்ந்து கொண்டனர். எளியவர்களுக்குக் கூடப் பகிர்ந்து கொடுக்கப்பட்டது. இதற்கான செலவுகள் நன்கொடைப் பணத்திலிருந்து செய்யப்பட்டன. (அப். பணி 2 45, 4/32-35 அப்பம் பிட்டுப் பகிர்ந்து கொள்வது பிரதான உணவு என்பது இதிலிருந்து தெளிவாகிறது. இச் சாதாரண வழிபாடு மறுமலர்ச்சியடைந்து, ஓர் அக்களிப்பை அளிக்கவல்ல வழிபாடாக மாறியது. இது ஒரு பெரிய குறையாக இருந்தாலும் தற்போதைய திருப் பலியைப்பற்றியும், திருச்சபை அதை எவ்வாறு நிறைவேற்றி வருகிறது என்பது பற்றியும் அறிவது நன்று. திருச்சபையில் பலியானது கீழை, மேலைத்தேச வழிபாட்டு முறைப்படி இடம் பெறுகிறது- இத்துடன் புரொட்டஸ்தாந்து முறை ஒன்றும் இருக்கிறது. இன்று இலங்கையில் நமக்கு உதவியாக நமது அறிவுக்குப் பிரயோசனமான மேலைத்தேச இலத்தீன் முறை வழிபாட்டைப் பற்றி ஆராய்வோம்.



## திருபலிப்பூசை ( இலத்தீன் முறையில் )

இம் முறைப்படி, திருப்பலிப்பூசையை இரண்டு பகுதிகளாகப் பிரிக்கலாம்.

1 வழிபாட்டில் இறைவார்த்தை

2 வழிபாட்டில் நற்கருணை

**வழிப்பாட்டில் இறைவார்த்தை**

| | |
|---|---|
| வருகைப் பாடல் ... | கிறிஸ்து நம்மை இரட்சித்ததற்கு நன்றி கூறி, அவரை மகிமைப் படுத்துவது. விசுவாசிகள் தாழ்மையான உள்ளத்துடன் பலிக்குத் தம்மை ஆயத்தஞ் செய்தல். |
| மன்னிப்பு இரந்து கேட்டல் ............. | விசுவாசிகள் தாம் செய்த குற்றங்களுக்கு மன்னிப்புக் கேட்டல். பாவ சங்கீர்த்தன மந்திரம் சொல்லல், தாம் அருகதையற்றவர்கள் என்கிற மனநிலையுடன் '' ஆண்டவரே இரக்கமாயிரும் '' எனச் சொல்லுதல். |
| வானவர் கீதம்... ... | திரித்துவத்தை மகிமைப்படுத்தும் பாடல், விசுவாசிகளின் விருப்பங்களையும், மன்றாட்டங்களையும், குருவானவருடன் இறைவனிடம் கூறல் |
| 1ம் வாசகம்...... | வேதாகம வாசகங்களின் மூலம் இறைவன் எம்முடன் பேசுகின்றார். கிறிஸ்தவன் எவ்வாறு வாழ வேண்டும் என்பது வலியுறுத்தப் படுகின்றது. ஆகவே இவற்றை எமது வாழ்க்கையிற் கடைப் பிடிப்பது நன்று. |
| தியானப்பாடல்.. ... | வேதாகமத்தின் மூலம் எம்முடன் தொடர்பு கொண்ட இறைவனை விசுவாசிகள் வாழ்த்துகின்றனர். கிறிஸ்துவின் நற்செய்தியை, தகுந்த முறையில் கேட்க நம்மை ஆயத்தப்படுத்துகின்றனர். |
| நற்செய்தி...... | விசுவாசிகள் நற்செய்தி வாசகத்திற்கு எழுந்து நிற்றல். அதனுடன் சிலுவை அடையாளம் வரைதல். |

நெற்றியில்: விசுவாசத்தைவிளங்கிக்கொள்ள அருள் கேட்டல்

உதட்டில்: விசுவாசத்தை அறிக்கையிடல்

நெஞ்சில்: அன்புடன் விசுவாசத்தை ஏற்று, அதை வாழ்வில் நடைமுறைப்படுத்தல்

நற்செய்தி உரை...... குருவானவர் மூலம், இறைவன் பேசுகிறார் இறைவனின் அரசுக்கு எவ்விதம் சாட்சிகளாய் விளங்க வேண்டும் என்பதற்கு வழிகாட்டுகிறார். அவருடைய வார்த்தையைத்துலாம் பரமாக விளங்கப் படுத்துகிறார்.

விசுவாசப்பிரமாணம்: விசுவாசிகள் விசுவாசப்பிரமாணத்தின் மூலம் இறைவனின் புத்திமதிகளுக்கு விசுவாசத்தில் செவிமடுக்கின்றனர்.

விசுவாசிகளின் மன்றாட்டம்: இது விசுவாசிகளின் சமுதாய மன்றாட்டம் அவர்கள் அனைத்துலகினதும், தமதும் தேவைகளுக்குமாக மன்றாடல்.

வழிபாட்டில் திவ்விய நற்கருணை

காணிக்கை...... குருவானவர் அப்பத்தையும், இரசத்தையும் இறைவனுக்கு ஒப்புக்கொடுக்கின்றார். அதில் பங்கு கொள்ளுபவர்கள் தம் வாழ்க்கை முழுவதையும் இறைவனுக்கு ஒப்புக்கொடுக்கிறார்கள். இறை மக்கள் அனைவரும் அவருக்கு நன்றி கூறி அவரைப் புகழ்ந்து இது குருவானரின் விசேடசெபமாகும்.

வசீகரப் பகுதி...... குருவானவர்கிறிஸ்துவின் வார்த்தைகளை உச்சரிக்கும் போது, இறைவனின் அருளால் அப்பமும் இரசமும் திரு உடலாகவும் இரத்தமாகவும் மாறுகின்றன. பீடத்தில் இப்போது பிரசன்னமான கிறிஸ்து, தன்னை இறைவனுக்கு ஒப்புக்கொடுக்கின்றார்.

சீவியர்களேயும், மரித்தவர்களேயும் ஞாபகப்படுத்தல் : பலி எல்லா மக்கட்கும் ஒப்புக் கொடுக்கப்பட்டு, அதன் அருள் வரங்களே எல்லோருக்கும் பகிர்ந்தளிக்கவேண்டுமென்று விரும்புகின்றனர்.



நற்கருணே

இயேசு கற்பித்த செபம்...... இது ஒரு சமுதாயச்செபம். விசுவாசிகள் இறைவனின் அரசை இவ்வுலகிற்கு அழைக்கின்றனர். இறைவனின் சித்தத்தை நிறைவேற்றுவதாக வாக்குப்பண்ணுகின்றனர்

நற்கருணே...... நாம் நற்கருணேயைப் பெற்ருல் தான். பலிபூசையை நிறைவேற்றி முடிக்கிறேம். இவ்விதம் பங்கு கொள்வதனுல் விசுவாசிகள் புதிய ஏற்பாட்டினே ஏற்று கிறிஸ்தவவாழ்வை உறுதிப்படுத்துகின்றனர்.

கடைசி ஆசீர்வாதமும் பிரியாவிடையும்...... விசுவாசிகளே இறைவன் உலகுக்கு அனுப்புகிருர். பலிபூசையில் பங்குபெற்றதின் நிமித்தம் அவர்கள் உறுதிப்படுத்தப்பட்டு புதிய வாழ்வுக்குச் சாட்சிகளாய் இருக்க அனுப்பப்படுகிருர்கள். ஒவ்வொரு கிறிஸ்தவனின் பொறுப்பு, இறைவனின் சமாதானத்தைப் பரப்புவதாகும்.

இப்போது நீங்கள் மேலேத்தேய லத்தீன் முறையில், பலி ஒப்புக்கொடுப்பதைப் பார்த்தீர்கள். புரட்டஸ்தாந்து வழிபாட்டு முறைகளேயும், உலக சங்கத்திருச்சபைகளுக்கு அங்கீகாரத்துக்கு அனுப்பப்பட்டுள்ளது.

## தீர்மானிப்படுத்தப்பட்ட இறைவழிபாடு.
## நற்கருணே விருந்துக் கொண்டாட்டம்.

1 புகழ்ச்சிப் பாடல்
2 மனஸ்தாபச் செயல்
3 ஒப்புரவாக்கல் வெளிப்படுத்துதல்
4 பலவிதங்களில் இறைவார்த்தையை வெளிப்படுத்தல்
5 விசுவாசப் பிரமாணம்
6 முழுத்திருச்சபைக்கும் உலகுக்கும் மன்ருடுதல்.

- அப்பத்தையும் இரசத்தையும் ஆயத்தப்படுத்தல்
- இறை தந்தைக்கு அவரது வல்லமை மிக்க
- மீட்பு, புனிதத்துவம் அனைத்திற்கும் நன்றி கூறல்.
- புதிய ஏற்பாட்டின் பாரம்பரியத்தின்படி திருவருட்சாதனங்களை ஏற்படுத்திய போது, கிறிஸ்து பயன்படுத்திய வார்த்தைகள்
- மேன்மையான செயலின் நினைவானது, மீட்பு, பாடுகள், மரணம், உத்தானம், ஆரோபணம், பரிசுத்த ஆவியின் வருகை இவையெல்லாம், திருச்சபையில் அனைத்தையும் ஒன்றிணைக்கின்றன.
- பரிசுத்த ஆவியின் உதவியை நாடும் போது, அது சமுதாயத்தினதும், அப்பம் இரசத்தினதும் வெளிப்படுத்தலாகும்.
- அர்ப்பண வாழ்வில் இறைவனுக்குப் பிரமாணிக்கமாய் இருத்தல்.
- சகல புனிதர்களையும் மகிமைப்படுத்தல்.
- கிறிஸ்துவின் இரண்டாம் வருகைக்கான செபமும் உண்மையான இறை அரசை வெளிப்படுத்தலும்
- முழு சமுதாயமும், ''அப்படியே ஆகட்டும் என்கிற மனநிலை
- இயேசு கற்பித்த செபம்
- ஒப்புரவாக்குதலினதும், சமாதானத்தினதும் வெளியடையாளம்
- அப்பத்தை பிட்டல்.
- இறுதி வாழ்த்து
- ஆசீர்வாதமும், அனுப்புதலும்.

இத் திருவழிபாட்டுச் சடங்குகள் சில புரடடஸ்தாந்து திருச்சபைகளுக்கு மட்டுப்படுத்தப்பட்டுள்ளன. புனித சின்னப்பர் பலிப்பூசையில் பங்கு கொள்வது பற்றியும் திவ்விய நற்கருணை பெறுதல் பற்றியும் கொடுத்த அறிவுரைகளை உங்கள் முன்நிறுத்த விரும்புகின்றோம்.

ஆகவே, அப்பத்தை உண்பதற்கு முன்னும், பானத்தைப் பாத்திரத்திலும் இருந்து குடிப்பதற்கு முன்னும். ஒவ்வொருவரும் ஆன்ம சோதனை செய்யவேண்டும். இவ்விதம் அவன் கிறிஸ்துவின் சரீரத்தை, அப்பத்தை உண்ணும் போதும், பாத்திரத்தில் இருந்து பருகும் போதும் அந்தக் கருத்தை உணராவிட்டால், அவன் நியாயத் தீர்ப்புக்கு ஆளாவான்.

*(1 கொரிந்தியர் 11/28-29)*

பயிற்சி 11 (அ) பின்வரும் கூற்றுக்கள் சரி என்றால் "√" என்னும், பிழை என்றால் "X" என்றும் அடையாளமிடுக.

1 மனிதன் வழிபடும் இறைவன் அன்புத் தந்தை என இயேசு காட்டினார். ☐

2 வழிபாட்டின் மையம் குருத்துவம் ☐

3 கல்வாரிப் பலிமூலம் கிறிஸ்தவர்கள் புது வாழ்வைப் பெறுகின்றனர் ☐

4 இறைவனின் கட்டளைப்படி, சிலுவைக்குச் சென்ற இயேசுவுக்குச் சுதந்திரம் இருக்க வில்லை. ☐

5 கடைசி இரா உணவின் போது இயேசு நற்கருணையை ஏற்படுத்தினார். ☐

6 திருச்சபையானது கல்வாரிப் பலியைப் பூசைப் பலிமூலம் தொடர்ந்தாற்றி வருகிறது. ☐

(ஆ) சரியான விடையின் கீழ் கோடிடுக

1 இறைவனுடன் மனிதனை ஒப்புரவாக்க இயேசு காட்டிய பாதை.

i இறையரசைப் பற்றிய இரகசியத்தை உவமைகள் மூலம் வெளிப்படுத்தினார்

ii கல்வாரியில் தம்மைப் பலியாக்கினார்

iii தமது தெய்வீகத்தன்மையை விட்டு மனிதனானார்

iv அற்புதங்களினால் இறைமக்களின் விசுவாசத்தை உறுதிப்படுத்தினார்

2 கிறிஸ்துவின் மணவாட்டி

i திருச்சபை

ii ஏற்படுத்தப்பட்ட திருச்சபை

iii தண்ணீரினால் திருமுழுக்குப் பெற்றவர்கள்

iv திருச்சபையில் செயலாற்றுபவர்கள்

3 நற்கருணையின் மூலம் பழைய ஏற்பாட்டின் பாஸ்கா உணவு

i தொடர்ந்தாற்றப்பட்டது

ii நிறுத்தப்பட்டது.

iii புத்துயிர் பெற்றது.

iv அதிகமாக விளக்கத்துடன் காணப்பட்டது.

4 ஆதி கிறிஸ்தவர்கள் காலத்தில் நடைபெற்ற பலிச் சடங்குகளுக்கு அவர்கள் வழங்கிய பெயர்

i கடைசி இரா உணவு

ii அப்போஸ்தலர்களின் வழிபாடு

iii அப்பம் பிட்டல்

iv ஏழைகளின் விருந்து

5 இன்று ''வானவர் கீதத்தின்'' மூலம், பலிப் பூசையில் விசுவாசிகள்:

i விசுவாசத்தை அறிக்கையிடுகின்றனர்.

ii கிறிஸ்துவை மகிமைப்படுத்துகின்றனர்.

iii இறைவனின் உதவியை நாடுகின்றனர்.

iv பரிசுத்த திரித்துவத்தை வாழ்த்துகின்றனர்.

உங்கள் விடைகளை மொடியூலின் இறுதியில் உள்ள விடைகளுடன் ஒப்பிடுக.

இப்போது திவ்விய பலிபூசை பற்றி அறிந்திருக்கிறீர்கள். இது இறைமக்களின் வழிபாட்டின் மையமாக உள்ளது. இரண்டாம் வத்திக்கான் சங்க திருவழிபாட்டு மறுமலர்ச்சிக்கு உங்கள் கவனத்தைத் திருப்புகிறோம்.

பகுதி iii

## 5 0 வழிபாட்டின் மறுமலர்ச்சி (2ம் வத்திக்கான்)

### முன்னுரை

இரண்டாம் வத்திக்கான் திருச்சங்கமே, திருச்சபையின் செயல்முறைக்கு ஒரு புதிய மறுமலர்ச்சியை உருவாக்கக் காரணமாக இருந்தது. இந்த சீர்திருத்தமானது வழிபாட்டில் பலதிறப்பட்ட கனிகளையும் உருவாக்கியுள்ளது. இதுவே உயிருள்ள திருச்சபையின் அடையாளம். இவ் மறுமலர்ச்சிக்குப் பல காரணங்கள் இருந்தபோதிலும், மிக முக்கியத்துவம் வாய்ந்தவைகளே கீழே தரப்பட்டுள்ளன.

- இறைமக்கள் வழிபாட்டில் முழுமையாக அறிந்து, பயனுள்ள விதத்தில் செயல் முறையில் பங்கு கொள்ளல்.
- பல்வேறு வழிபாட்டு முறைகள் சடங்குகளை, மக்களின் கலாசாரத்துடன் தொடர்புபடுத்தல்.
- வழிபாட்டின் வழிபாட்டு முறைகளில் புனிதமானவைகளைத் தெளிவாக அறிவித்தல்.
- வழிபாட்டின் மூலம் அளப்பரிய அருளைப்பெற இறைமக்களுக்கு வழி வகுத்தல்.

இத்தகைய மறுமலர்ச்சிக்குத் திருச்சபையானது போதிய சந்தர்ப்பங்களை அளித்ததுமன்றிக் கீழ்க் காணும் விதிகளையும் கொடுத்துள்ளது.

— திரு ஆட்சிபீடத்தின் அங்கீகாரத்துடன், ஆயர்கள் சீர்திருத்தங்களை நடைமுறைக்குக் கொண்டுவர அதிகாரம் உண்டு.

— சட்டத்தால் வழங்கப்பட்ட அதிகாரத்தின்படி, குறிப்பிடப்பட்டுள்ள, வரம்புகளுக்குள்ளே மா நிலக் குழுவை உருவாக்கும் அதிகாரம் ஆயர்க ளின் பேரவைகளுக்குரியது.

— புதிய மாற்றங்கள் யாவையும், பரிசுத்த ஆட்சி பீடத்தின் அங்கீகாரத்திற்கு அனுப்பி வைத்தல் வேண்டும்.

— எவரும் குருக்களாய் இருந்தாலும் கூட தமது சொந்த அதிகாரத்தால், வழிபாட்டில் எதையும் சேர்க்கவோ, நீக்கவோ, மாற்றவோ கூடாது.

(திருவழி. 22/1-3)

எனவே, பரிசுத்த ஆட்சி பீடமான, திருவழிபாட்டின் சீர்திருத்தங்களை, இக்காலத் தேவைகளுக்கேற்ப மாற்றி அமைக்கத் திட்டமிட்டுள்ளது என்பதைக் காணக் கூடியதாக உள்ளது.

## இலத்தீன் வழிபாட்டு முறை

இலத்தீன் மொழியிலிருந்து, தாய்மொழிக்கு மாற்றி யமைத்தது முதன்மையான சீர்திருத்தமாகும். பலி பூசை வழிபாட்டிலும், அருட்சாதனங்கள் வழிபாட்டி லும் இம் மாற்றங்கள் இடம்பெற்றுள்ளன. கீழைத் தேய கிறிஸ்தவர்கள் இதில் மிகவும் ஆர்வம் காட்டி னர். இவ்வித மாற்றம் அவர்களுக்குத் தேவைப்பட் டது. ஆகவே ஆயர்கள் மாநில சங்கங்களைக் கூட்டி மேற்கூறியவற்றில் அவசியமான சீர்திருத்தங்களை அவர்கள் முன் நிறுத்திப் பரிசுத்த ஆட்சி பீடத்தில் ஒப்புதலை அல்லது உறுதிப்பாட்டைப் பெறவேண்டும்.

தாய் மொழியிற் பலிபூசை நடைபெறுவதினால், கிறிஸ்தவர்கள் எளிதில் அறிந்துகொண்டு பங்கு கொள் ளக் கூடியதாக உள்ளது. உதாரணம்:- இன்று இலங் கையில் சிங்களத்திலும், தமிழிலும் பலிபூசைகள் ஒப் புக் கொடுக்கப்படுவதனால், விசுவாசிகள் அதில் ஆழ்ந்த பக்தியுடன் சிறந்த முறையில் பங்கு கொள்ளக் கூடிய வர்களாக இருக்கின்றனர்.

பெற்றோர், ஞானம் பெற்றோர் தம் குழந்தைகளை ஞானஸ்நானத்துக்குக் கொண்டு போகும் போது, தத் தம் கடமைகளை எளிதில் விளங்கிக் கொள்ளக் கூடிய தாக உள்ளது. ஆகவே, லத்தீன் மொழியில் இருந்து தாய் மொழிக்கு உண்டான மாற்றம், பரிசுத்த ஆவி யின் ஏவுதலே ஆகும்.

### சாதாரணச் சடங்குகள்

ஆயர்களின் குழுவானது, கீழ்க்காணும் அறிவுரைகளை எமக்கு அளிக்கின்றது. சடங்குகள் எளிமையில் சிறந்து விளங்கட்டும். சுருக்கமாகவும் தெளிவாகவும் இருக்கட்டும். பயனற்ற முறையில் எதையும் மீண்டும் மீண்டும் கூறக்கூடாது. விசுவாசிகள் எளிதில் அறிந்துகொள்ள இயலும் வகையிலும், பொதுவாக அதிக விளக்க வுரைகளின்றிப் புரிந்து கொள்ளும் முறையிலும், அமைய வேண்டும். (2ம் வத் 1/34) இறை பணி அல்லது திருவழிபாட்டுக் கொள்கைத் திரட்டு 1–34)

### இறை வார்த்தைக்கு உரிய இடம்

மறுமலர்ச்சியானது, இறைவார்த்தைக்கு முக்கிய இடத்தை அளிக்கிறது சில காரணங்களை முன்னிட்டு ஞாயிறுபூசை நடைபெறாத ஒரு பங்கில், விசுவாசிகள் ஒன்று சேர்ந்து வேதாகம வழிபாடு நடாத்தலாம். இவை விசுவாசிகளிடையே நெருங்கிய உறவையும், ஞான அறிவையும் வளர்க்கிறது. மறை நூலைப் பயன் தரும் முறையில் தெளிவாக வாசிக்கும் போது பங்கு கொள்பவர்களின் விசுவாசம், ஊட்டம் பெறுகின்றது. கிறிஸ்தவ வாழ்வை அறியவும் சந்தர்ப்பம் அளிக்கின்றது. ஆகவே அவன் தன் வாழ்வின் பாதையை நற்செய்திக்கு ஏற்றவாறு மாற்றி அமைக்க வழிவகுக்கின்றது. (2ம் வத். 1/35) இறை வார்த்தையைப் பயன்தரும் முறையில் சீரமைப்பதன் பொதுவிதிகளை இச் சங்கம் வெளியிட்டுள்ளது. சடங்குகளுக்கும், சொற்களுக்கும் உள்ள நெருங்கிய உறவு, தெளிவாக வெளிப்படுவதற்குத் திருக்கொண்டாட்டங்களில் இடம்பெறும மறைநூல்வாசகம், இன்னும் அதிகமாகவும் வேறுபட்டதாகவும், பொருத்தமானதாகவும் இருக்க வேண்டும்.

### திரு இசையும், பாடல்களும்

திரு இசையும், பாடல்களும் ஆன்ம வளர்ச்சிக்கு மிகவும் இன்றியமையாதன எனத் திருச்சபை வலியுறுத்துகின்றது எனவே, இவ் இசையும், பாடல்களும், வழிபாட்டின் விதிகளுக்கேற்ப. நேரிய பக்தியுடன் உருவாக்கப்படல் வேண்டும் 2ம் வத். சங்கம் கூறுவதாவது, திருசபையின் தலைவர்கள் இந்த இசை, பாடல்களை ஊக்குவித்து மக்கள் ஒரே குடும்பமாக ஒன்றிணைந்து இறைவனுக்கு மாட்சி நல்குவதையும், மனிதனைப் புனிதப்படுத்துவதையும் தன் குறிக்கோளாகக் கொண்டிருக்க வேண்டும் என்பதையே சில மாநிலங்களில் முக்கியமாக மறைபரப்பு நாடுகளுலுள்ள மாநிலங்களில் தமக்குச் சொந்தமான இசைமரபைக் கொண்ட மக்கள் உள்ளனர், இது அவர்களின் மறை வாழ்விலும் சமூக வாழ்விலும் மிக முக்கியத்துவம் பெற்று விளங்குகின்றது. எனவே இம் மக்களின் தனிப்

பண்புக்கு ஏற்ப வழிபாட்டைத் தழுவியமைக்கும் வகையிலும் இவர்களின் மறை உணர்வை வளர்க்கும் முறையிலும் இவர்களின் இசைக்கு உரிய மதிப்பு அளித்துத் தகுந்த இடம் தரவேண்டும். தி. வழிபாடு 1 119. )



கலாசாரம்

இலங்கையின் திருச்சபை சரித்திரத்திலே கலாசாரம் முக்கிய இடத்தை வகிக்கின்றது. ஐரோப்பியரின் பண்பாட்டிலே கிறிஸ்தவம் இலங்கையில் பரவியது. எனவே கிறிஸ்தவர்கள் உள்நாட்டுக் கலாசாரத்திற்கு அப்பாற்பட்டவர்கள் எனக் கருதப்பட்டனர். இறை மக்கள் இயற்கையாகவே மறைபரப்பினர். எனவே அவர்கள் நற்செய்தியைப் பரப்ப வேண்டுமாயின் உள்நாட்டுப் பாரம்பரிய கலாசாரங்களைப் பின்பற்ற வேண்டும். யோசேப் வாஸ், யாக்கோப் கொன்ஸாலஸ் அடிகளார் மேற்கொண்ட ஆற்றல்கள் வாழ்த்தப்படக் கூடியவை எல்லா உலக கலாசாரங்களும் மனிதனால் உண்டான கைவண்ணங்கள், விளக்க நூல்கள், வழிபாட்டு முறைகளையும் கொண்ட தாயும் உள்ளன. இவ்வித உறுதியான வழிகாட்டல்கள் விசுவாசத்தை அதிகரிக்க மக்களுக்குப் பயன் அளிக்கின்றன. இவ்விதம் திருவழிபாட்டில் பங்குபற்றி, இறைவனின் மாட்சியை எடுத்துரைப்பது வழிபாட்டின் மூலமேயாகும். இவ் அருளை மக்கள் பெற வழி வகுப்பது ஆயர்களின் கடமையாகும் இரண்டாம் வத்திக்கான் சங்கத்தில் இது வலியுறுத்தப்பட்டுள்ளது. கொழும்பில் நடைபெற்ற மாநில சங்கம் **(1968 – 1969)** கூறுவதாவது மிக எளிய இசைகளைக் கொண்ட இசைக்கருவிகளைத் திருச்சடங்குக்கொண்டாட்டங்களில் ஆலயங்களின் உள்ளும் மேளத்தை ஆலயங்களுக்கு வெளியேயும் பயன்படுத்தலாம். அதே போல் பக்தி உணர்வை உண்டாக்கும் நடனங்கள். இவை மறை பரப்புவதற்கும் செபம் செய்வதற்கும் வழி வகுக்கின்றன. தேசிய உடைகள் குத்து விளக்கு, தென்னோலை போன்றவற்றின் அலங்காரங்கள் கலாசாரப் பண்பை எமது ஆலய பீடங்களிற் பிரதிபலிக்கலாம். இவ்விதம் கலாசார ஒருமைப்பாட்டின் உணர்வைக் கிறிஸ்தவர்களுக்கு வெளிப்படுத்தும் போது இறை அரசைப் பற்றி அறியச் சுலபமாக இருக்கும் ஆகவே திரு வழிபாட்டின் குறிகள், அடையாளங்கள் ஆகியவற்றை எம் உள்நாட்டுக் கலாசாரத்துடன் புணர்த்துவது திருச்சபை அதிகாரிகளின் கடமையாகும். திருவழிபாட்டை மக்களின் வாழ்வில் அறிமுகப்படுத்த வேண்டுமாயின், பரம்பரையான உள்நாட்டுக் கலாசாரங்களையும், முறைகளையும் படிப்பது அவசியமாகும். சில தேசிய பழக்கவழக்கங்களையும் கையாளலாம். ஆனால் இவை இயற்கை, வெளி ஆடம்பரங்களாக மட்டுமன்றிப் பக்தியான உணர்வையும், மனப்பான்மையையும் கொண்டிருத்தல் வேண்டும்.

உதாரணம்.

பாஸ்கா விழிப்பின் சடங்கின் போது புதிய நெருப்பை தேசிய வழக்கத்தின் படி பால் கொதிக்க வைப்பதற்குப் பயன்படுத்தலாம்.

— பெரிய வியாழன் அன்று, பாணுக்குப் பதிலாகப் பாற்சோறு கொடுக்கலாம்

— குழந்தைகளின் ஞானஸ்நானத்தின் போது வெளிப்படையாகவும், ஏற்ற வகையிலும் புதியதொரு சடங்கை உருவாக்கலாம்.

**சமூகத்தினரின் செயல்பங்கு**



விசுவாசிகள் செயல்முறையில் பங்கு கொள்வதினால், வழிபாடு கருத்துள்ளதாக அமையும். பங்கு மக்களினால் (குரு. விசுவாசிகள்) ஒப்புக்கொடுக்கப்படும் பூசைப்பலியானது கிறிஸ்துவின் மறை உடலின் அதி உன்னத செயலாகும். இச் செயல் மக்களைப் புனிதப்படுத்துகிறது. மேலான வணக்கத்தைப் பிதாவுக்குச் செலுத்துவதனால் விசுவாசிகள் இறைவன் மேல் கவரப்பட்டு தெய்வீக அருளைப் பெறுகின்றனர். ஆகவே திரு நிகழ்ச்சிகளைத்தகுந்த முறையில் நடைமுறைப் படுத்தப்படுதலில் மொழிகள், சங்கீதங்கள், போன்றன சமூகத்தின் ஏற்ற வகையில் பங்குகொள்ள உதவியாக இருக்கும். நிறைவாகவும், அறிந்தும் செயல்முறையிற் பங்கு கொள்ள ஆயர்கள் விசுவாசிகளுக்குப் பயிற்சி அளிக்க வேண்டும். 2ம் வத்திக்கான சங்கம் கூறுவதாவது வழிபாட்டுச் சடங்கு நூல்களைத் தகுந்த முறையில் ஆயத்தம் செய்ய வேண்டும். இவ்விதம் சிறந்த வழி முறைகள் மக்களின் விசுவாசத்தை அதிகரித்து எளிதில் புரிந்து முழுமையாகப் பங்கு கொள்ளச் செய்கிறது. எனவே இறைவரின் பிள்ளைகளுக்குரிய வாழ்த்தை அவர்கள் வழிபாட்டின் மூலம் வெளிப்படுத்துகின்றனர். இவ்வித ஆசியுரைப் பெற வழிவகுப்பது, ஆயர்களின் விசேஷ கடமையாகும் என 2ம் வத்திக்கான் சங்கம் வலியுறுத்துகின்றது.

வழிபாட்டுக்கொண்டாடட்டங்களிற் பணிபுரியும் குருக்கள் அல்லது பொது நிலையத்தினர், கொண்டாட்டங்களின் தன்மைக்கும் விதிகளுக்கும் ஏற்பத்தத்தமக்குரியதை மட்டுமே நிறைவேற்ற வேண்டும். உதவியாளர், வாசகர், பாடகர்குழாம் யாவரும் வழிபாட்டில் பணியாற்றுகின்றனர். ஆகவே இவர்கள் இம்மாபெரும் பணிக்குத் தகுந்ததும் இவர்களிடமிருந்து இறைமக்கள் உரிமையுடன் எதிர்பார்ப்பதுமான நேரிய பக்தியுடனும் ஒழுங்குடனும், தத்தம் பணிகளை ஆற்றவேண்டும். இவர்கள் அனைவரும் பரிசுத்த ஆவியினாலே தூண்டப்பட்டுத் நாம் செய்பவற்றை ஊன்றி அறியவும், தமது கடமைகளைத் திருப்திகரமாகச் ஆற்றவும் போதிய

பயிற்சி பெற வேண்டும். (திரு.வழிபாடு ........1/28-29) இதனை ஏற்றுக்கொள்ளப் பலிப்பூசை, அருட்சாதனங்கள் யாவும் 2ம் வத்திக்கான் சங்க விதிகளுக்கேற்ப மாற்றியமைக்கப்பட்டுள்ளன.

## முடிவுரை

மறை உடலின் அங்கத்தவனை அற்பமனிதன், இறைவனை மகிமைப்படுத்துவது, திருவழிபாட்டின் உள்ளார்ந்த குணுதிசயமாக விளங்குகிறது. கிறிஸ்துவின் பலியில் அவன் பங்குகொள்வது மட்டுமன்றி, இறைவனின் அருளால் புனிதத்தன்மையை அடைந்து, புது வாழ்வைப் பெறுகிறுன். உதாரணம் (உயிர்த்த இயேசுவின் வாழ்வில்) இப் புதிய வாழ்வானது புனிதர்களின் கூட்டத்தில் அங்கத்தவனுகவும், இறைமக்களின் ஒற்றுமைக்கும் இவ்வுலகில் சான்று பகர்ந்து, கிறிஸ்துவின் உத்தானத்தில் பங்காளியாகின்றுன்.

இவ்வாறுன ஆசீரை மனிதகுலம் பெறுவதற்குக் கிறிஸ்து மனித சரித்திரத்திலே திருச்சபையின் வழிபாட்டின் மூலம் செயற்படுகிறது. இவ்வுலகில் திருச்சபையானது பலவிதங்களில் வணக்கத்தைச் செலுத்தும் போது, தேவ தூதர், புனிதர்களோடு, இறைவனுக்கு மகிமைப்பண் இசைக்கின்றனர். கிறிஸ்துவின் மணமகளாம் புதிய ஜெருசலேம். எங்கள் இறைவனே! எங்கள் கர்த்தரே! மகிமையும், மாட்சியும், வல்லமையும் உமக்குரியதே!'' இறை வெளிப்பாடு. 4/11

முற் பகுதியில் படித்தவற்றை, உங்கள் மனதில் உணர்த்துவதற்குக் கீழ்க்காணும் பயிற்சிகளைத் தயவு செய்து செய்க.

**பயிற்சி 111**

சரியான விடையின் கீழ் கீறிடுக

*1* இரண்டாம்வத்திக்கான் சங்கத்தினுல் கத்தோலிக்க திருச்சபையில் என்ன நடந்தது?

- i தவறுன ஆசை
- ii குறைபாடு
- iii மறுமலர்ச்சி
- iv ஒரு புதிய வாழ்வு

*2* திருவழிபாட்டில் உண்டான சீர்த்திருத்தம் கிறிஸ்தவ மக்களை:

- i சுதந்திரமாகச் செய்தது
- ii மறுமலர்ச்சியில் கருத்தைப் புரிந்து கொள்ளச் செய்தது
- iii அப்போஸ்தலிக்க பணியில் சுதந்திரம் பெறச் செய்தது

iv தெய்வீக அருளை மேலதிகமாகப் பெறச் செய்தது.

3 ஆயர்கள் உள்நாடுச் சங்கங்களை நிலைநாட்டியது. தேவையான சீரமைப்பினை............

i ஏவுதற்கு

ii மக்களுக்கு

iii கண்டு பிடிப்பதற்கு இவைகளைப் பற்றி அறிவிப்பதற்கு

iv சிறந்த உணர்ச்சியை எழுப்புவதற்கு

4 திருவழிபாடானது அதிகம் நீண்டும், விளக்கம் இல்லாமலும் இருக்கும் போது, விசுவாசிகளின் மனம்.

i நோக்கம் பெறுகிறது

ii கட்டுப்படுத்தப்படுகிறது

iii உடைகிறது

iv வளர்ச்சியடைகிறது

5 இசையும், பாடல்களும் வழிபாட்டுடன் தொடர்புடையதாக இருப்பதற்கு

i உள்நாட்டுடன் ஒட்டியதாக இருத்தல் வேண்டும்

ii எளியதாய் இருத்தல் வேண்டும்

iii பக்தியானதாய் இருத்தல் வேண்டும்

iv நவீனமானதாய் இருத்தல் வேண்டும்

6 உணர்ந்து செயலாற்றும் போது மக்களின் விசுவாசமானது

i வெளிப்படுத்தப்படுகின்றது

ii எளிதாக்கப்படுகின்றது

iii பிரசித்தமாகிறது

iv உறுதிப்படுதப்படுகின்றன

7 திருவழிபாட்டின் உள்ளரங்க குணதிசயமானது.

i தந்தையாம் இறைவனுக்கு நன்றி செலுத்துதல்.

ii பக்தியை வெளிப்படுத்தல்

iii மறை உடலை எடுத்துரைத்தல்

iv கிறிஸ்தவ திருச்சபை இறைவனை நாடுதல்

உங்கள் விடைகளை மொடியூலின் இறுதியில் உள்ள விடைகளுடன் ஒப்பிடுக.

## 6.0 பொழிப்பு

மறை உடலின் தலைவரான கிறீஸ்துவுடன் கிறீஸ்தவ அங்கத்தவர் அனைவரும் ஒன்றிணைந்து தந்தையாகிய இறைவனுக்கு அதி உன்னத வணக்கத்தைச் செலுத்துவதன் பிரதிபலனாக மனிதன் புனிதத்தன்மை அடைகிறான் இறையருள் அருட்சாதனங்களின் வழியாக வெளிப்படுத்தப்பட்டுக் கிறிஸ்தவ வாழ்விலுள்ள பல்வேறு சூழ்நிலைகளையும் புனிதமடையச் செய்கிறது. வழிபாட்டின் மையமாக விளங்குவது தேவநற்கருணை இது அருட்சாதனமும் பலியுமாக ஒன்றோடொன்று நெருங்கி இணைந்து இறைவனுக்கும் மனிதனுக்கும் இடையில் உறவை வளர்க்கின்றது. பலிபூசையானது இலத்தீன் முறைப்படி இலங்கையில் ஒப்புக் கொடுக்கப்படுகிறது. புரொட்டஸ்தாந்தவர்கள் விசேட சடங்கு நூல்களும் உள்ளன. பலிபூசையில் பங்கு கொண்டுதொடர்பு கொள்வதும் இறைமக்களின் கடமையாகும். இரண்டாம் வத்திக்கான் சங்கத்தின் பின் சிறந்த முறையில் வழிபாட்டில் பங்கு கொள்வதற்காகத் திருச்சபை பலவித சீர்திருத்தங்களை வெளியிட்டுள்ளது, உயிருள்ள திருச்சபைக்கு இது சான்று பகருகின்றது. எனவே தாய்மொழிகளிலே பலிபூசைகள் நடைபெறுகின்றன. சடங்குகள் எளியனவாகவும், உள்நாட்டுக் கலாசாரத்தைத் தழுவியனவாகவும், இறைவார்த்தைக்கு முக்கியத்துவமும் அளித்துள்ளன இவை மறுமலர்ச்சியின் கனிகளாகும். விசுவாசிகள் முழுமையாகப் பங்குபற்ற இவை மேலான வழியை வகுத்துள்ளன. இவையே மறுமலர்ச்சியின் குறிக்கோளாகும்.

வழிபாட்டின் மூலம் இறைமக்கள் இறைவனுடன் ஒன்றிணைந்து கிறிஸ்துவின் உத்தானத்துக்குரிய உரிமையைப் பெறுகின்றனர். இறுதி நாளில் இறைமக்களும் மரித்தோரிடம் இருந்து உயிர்த்து, விண்ணரசில் இறைவனின் மகிமைப்படுத்துவர். (புதிய யெருசலேம்)

இப்போது இம்மொடியூலை படித்து விட்டீர்க்ள். எனவே இத் தொகுப்பிற் பெற்ற அறிவினுல் உங்கள் கிறிஸ்தவ வாழ்விற்குரிய ஆழ்ந்த அறிவைப் பெற்றிருக்கிறீர்கள் என்பது திண்ணம், எனவே பின்வரும் பயிற்சிகள் உங்கள் அறிவை மதிப்பிட உதவியாக இருக்கும்.

## 7.0 பிற்சோதனை

(அ) பின்வருவன சரியாயின் √ எனவும், பிழையாயின் × எனவும் குறித்திடுக,

1 மனித குலமானது, பலவித வணக்கங்களை யும், வழிபாட்டு முறைகளையும், பிறப்பித் ததன் பயனாக வீழ்ச்சி அடைந்தது. ☐

2 ஆதிகால மனிதன் பயத்தினால், தெய்வீக வணக்கத்தில் ஈடுபட்டதினால், ஓரளவு ஞான மதிப்பு உண்டு. ☐

3 வழிபாட்டின் இறுதி நோக்கம் இறைவ னுக்கு நன்றி செலுத்துவதும், அவனுடைய பாதுகாப்பை இரங்கி நிற்பதுமாகும். ☐

4 உபதிரு வழிபாடு, திருவழிப் பாட்டுக்கு பயிற்சி அளிக்கிறது. ☐

5 கிறிஸ்தவர்கள் மத்தியில் காணப்படும் பிர தான ஆராதனைகள், திருச் சபையினால் மிகச் சிறந்தவையாகக் கணிக்கப்படுகின் றன. ☐

(ஆ) பொருத்தமான தொடரில் "√" அடையாளமிடுக

1 திருவழிபாட்டுக்கு அடிப்படையாக உள்ளது.

i அறியும், பக்தியும்

ii பக்தியும் ஆளுமையும்

iii விசுவாசமும் தாழ்மையும்

iv இறைவனுக்குப் பயமும், சமாதானத்துக்கு ஆவலும்

2 மீட்பின் கிறிஸ்து, உலகுக்கு வெளிப்படுத்தியது இறைவனின்:-

i மேன்மையான நீதி

ii இயற்கைச் சுபாவம்

iii அளவற்ற அன்பு

iv மீட்பின் திட்டம்

3 கல்வாரிப் பலியின் உண்மைக் கருத்து:-

i திருப்பாடுகளின் நாடகம்

ii அப்போஸ்தலர்களின் போதனைகள்

iii சிலுவை அவமானம்

iv தேவநற்கருணை

4 உள்நாட்டு அலங்காரங்களை ஆலயங்களில் பயன் படுத்துவது

i வற்புறுத்தப்பட்டுள்ளது

ii பொருத்தமற்றது

iii பொருத்தமானது

iv அனாவசியமானது

5 பூசைப் பலியின் போது, இறைமக்களின் செப மானது

i இயேசு கற்பித்த செபம்

ii சபைச் செபம்

iii விசுவாச மந்திரம்

iv விசுவாசிகளின் மன்றுட்டம்

(இ) அ பகுதியை ஆ பகுதியுடன் தொடர்புபடுத்தி. ஆ பகுதியிலுள்ள சரியான விடையைத் தெரிந்தெடுத்து அதன் இலக்கத்தை அடைப்புக்குறிக்குள் எழுதுக

அ

| | | |
|---|---|---|
| 1 | பலிப்பூசையும், நற்கருணையும் | ( ) |
| 2 | சடங்குகள் மூலம் கிறிஸ்தவ வாழ்க்கையை உருவாக்குவதற்கு | ( ) |
| 3 | அன்பின் அடையாளமான தேவகருணை | ( ) |
| 4 | திருச்சபைத் தலைவர்கள் இறைமைகளுக்காக | ( ) |
| 5 | மறைபரப்புக்கான ஆற்றலை திருச்சபையில் வளர்த்தல் | ( ) |
| 6 | உள்நாட்டுக் கலாச்சாரத்தினுல் வழிபாடு | ( ) |
| 7 | புதிய ஏற்பாட்டின் அடிப்படை | ( ) |
| 8 | புகழ்மாலை | ( ) |

ஆ

1 இறைமக்கள் அவைகளுக்கு அல்ல

2 வழிபாட்டின் மூலம்

3 கல்வாரிப்பலியாகும்

4 இறைவார்த்தைக்கு முக்கிய இடம் அளித்தல் வேண்டும்.

5 பிரிக்கமுடியாது.

6 திருவழிபாட்டின் முக்கிய பகுதி

7 ஒற்றுமையின் அடையாளம்

8 இறைவாசங்களின் மூலம்

9 ஞானமனப்பான்மையை வளர்க்கின்றது.

10 பரிசுத்த ஆவியின் கொடைகள்.

11 பழைய ஏற்பாடு

உங்கள் விடைகளை மொடியூலின் இறுதியில் உள்ள விடைகளுடன் ஒப்பிடுக.

நீங்கள் இப்போது இம்மொடியூலைக் கற்று முடித்துள்ளீர்கள் நீங்கள் இதனை வெற்றிகரமாகக் கற்று முடித்துள்ளீர்களா என்பதனைச் சோதிப்பதற்கு நீங்கள் இதுபற்றிச் சமர்ப்பிக்க இருக்கும் ஒப்படை உதவும். பின்வருவது அத்தகைய ஓர் ஒப்படையாகும் அதற்கு விடை எழுதித் தொலைக் கல்வி நிறுவகத்துக்கு அனுப்புக.

## 8.0 ஒப்படை

2ம் வத்திக்கான் சங்கத்தின் காரணமாக திரு வழிபாட்டில் ஏற்பட்ட மறுமலர்ச்சியானது உமது பொது வழிபாட்டு முறைகளிலும், மற்றும் ஆலய ஆராதனைகளிலும் எவ்விதம் உணரப்பட்டு உதவியுள்ளது என்பதை விபரிக்குக.

பின்வரும் விடயங்களை பயன்படுத்தலாம்.

1 பலிப்பூசைச்சடங்குகளில் ஏற்பட்ட மறுமலர்ச்சி

2 இறைவார்த்தைக்கு முக்கிய இடம் அளிப்பதில், மறுமலர்ச்சி

3 இறைமக்கள் பங்கு பெறுதல் பற்றிய மறுமலர்ச்சி

## 9.0 சொற்பட்டியல்

மத்திய கிழக்கு — மத்தியதரைக் கடலைச் சூழவுள்ள நாடுகள்

மனிதப்பலி — குழந்தைகள், கன்னிப்பெண்கள், இளைஞர்களைப் பலியாக ஒப்புக் கொடுத்தல்

விண்ணரசு — இறைவன் தங்கும் இடம்......ஆனால் திருச்சபையின் படிப்பினைப்படி அது ஒரு நிலை இடமல்ல! ஓர் அனுபவம்; மனநிலை

புனிதத்தன்மை — பரிசுத்த ஆவியின் திடமும், இறைவனின் அருளும், மனிதனின் மேலான வளர்ச்சி

இறைமக்கள் — இறைவனுக்கு விசேடவிதத்தில் சொந்தமான. பரிசுத்த, குருத்துவ, அரச மக்கள்

மறையுடல் — கிறிஸ்துவின் தெய்வீகத் தன்மை மனிதத் தன்மையில் அடங்கியுள்ளது.

நித்திய குரு வழிபாட்டு — கிறிஸ்துவின் இறைத்தன்மை

ஆண்டு — பரிசுத்த ஆட்சி பீடத்தினுல் அங்கீகரிக்கப்பட்ட திருநாட்களில் ஆண்டுக்குறிப்பேடு. திருவருகை காலத்துடன் ஆரம்பம்

திருபுகழ்மாலை — திருச்சபையின் திருப்புகழ்மாலையானது காலைச்செபம் மாலைச்செபம், இரவுச்செபம். சங்கீதங்களையும் வேதாகம வாசகங்களையும் தழுவியது

பரிசுத்தஆட்சி பீடம் — திருச்சபையின் அதிகாரம் விசுவாசம், ஒழுங்குமுறைகள், திருச்சபைச் சட்டங்கள்

மனஸ்தாபம் — உளமாற்றம், தீமையை விலக்கி நன்மையைச் செய்யத் தீர்மானமெடுத்தல்

கீழைத்தேசவழி பாட்டு முறை — பலிபூசை வழிபாட்டு முறைகள் மிகவும் பிரசித்தமாக உள்ளன

மேலைத்தேச வழிபாட்டுமுறை — ஐரோப்பாவில் வழிபாட்டுமுறை பரந்து காணப்படுகிறது.

இலத்தீன் வழி பாட்டுமுறை — பலிபூசை வழிபாட்டு முறையில் லத்தீன் பாவிக்கப்படுகின்றது. இது ரோமாபுரியிலிருந்து பரவியது.

2ம் வத்திக்கான் சங்கம் — 21வது பொதுச்சங்கம் அருளப்பர் பாப்பரசராம் ஐப்பசி 11ந் திகதி 1962 ஆரம்பிக்கப்பட்டது.

இறைவார்த்தை — பரிசுத்த வேதாகமம், புதிய ஏற்பாடு, பழைய ஏற்பாடு

## 10.0 மேலதிக வாசிப்பு

— திருவழிபாட்டுச் சங்க ஏடு.1ம் 2ம் வத். சங்கம்

— புதிய ஏற்பாடு

— கிறிஸ்தவம் (ரோ. க, வகுப்புகள் 9,10.)

# 11.0 விடைகள்

| | |
|---|---|
| முற்சோதனை | 1 √ 2 × 3 √ 4 √ |
| | 5 √ 6 √ 7 √ 8 × |
| | 9 × 10 × |
| பயிற்சி i | (அ) i பயம் ii மூன்று |
| | iii இறைதந்தைக்கு |
| | iv வழிபாடு v தி |
| | (ஆ) 1 (ii) 2 (ii) |
| | 3 (iii) 4 (iii) |
| பயிற்சி ii | (அ) 1 √ 2 × 3 × |
| | 4 × 5 √ 6 √ |
| | (ஆ) 1 (ii) 2 (i) 3 (iii) |
| | 4 (iii) 5 (iv) |
| பயிற்சி iii | 1 (ii) 2 (iv) 3 (ii) |
| | 4 (iii) 5 (iii) 6 (i) 7 (i) |
| பிற்சோதனை | (அ) 1 × 2 √ 3 × 4 √ 5 √ |
| | (ஆ) 1 (iii) 2 (ii) 3 (iv) 4 (iii) |
| | 5 (iv) |
| | (இ) 1 (8) 2 (6) 3 (10) 4 (1) |
| | 5 (3) 6 (12) 7 (4) 8 (9) |

குறிப்பு

குறிப்பு

ஆசிரியர் தொலைக் கல்விப் பாடநெறி

OFFSET BY THE PACIFIC PRESS (PVT) LTD.